**தீபாவளி 2023 - இன்பவெள்ளம், நம்பிக்கையுள்ளம்**

# முதியோர் இல்லங்களில் இதமான கொண்டாட்டம்

**கி. ஜனார்த்தனன்**

குடும்பத்தினரால் கைவிடப்பட்ட முதியவர்கள் பலர், வசிக்கும் ‘சன்லவ்’ இல்லத்தை தமிழ் ஆசிரியர் விக்னேஸ்வரி ரெத்தினம், 43, ஒரு கோயிலாகக் கருதுகிறார்.

திருவாட்டி விக்னேஸ்வரியின் தீபாவளி, கடந்த 15 ஆண்டுகளாக சன்லவ் முதியோர் இல்லத்தில்தான் தொடங்கும். 2008ல் தம் தந்தை காலமான ஆண்டிலிருந்து இவ்வழக்கம் தொடங்கியது. கொவிட்-19 தொடங்கியது முதல் மதிய உணவுக்கு மட்டுமே ஏற்பாடு செய்து வந்த திருவாட்டி விக்னேஸ்வரி, இம்முறை இல்லவாசிகள் அனைவரையும் நேரில் காண்பதில் மகிழ்ச்சி கொள்கிறார்.

“தீபாவளியன்று குடும்பத்தாருடன் கோயில் செல்லும் அனுபவம் குதூகலமாக இருக்கும். ஆனால் என் தந்தை காலமான ஆண்டில் கோயில் போக முடியவில்லை,” என்று கூறினார்.

முதியோர் இல்லத்திற்குப் போவதாக அறிவித்த நண்பர் ஒருவரின் ஃபேஸ்புக் பதிவைக் கண்ட பிறகு, அவருடன் இணைந்து செல்ல திருவாட்டி விக்னேஸ்வரி முடிவுசெய்தார்.

முதியோர் பலரின் வாழ்க்கைக் கதைகளைக் கேட்டது திருவாட்டி விக்னேஸ்வரிக்குத் திருப்புமுனையாக அமைந்தது.

சிரமப்பட்டு பிள்ளைகளை வளர்த்து, பின் அவர்களாலேயே கைவிடப்படும் நிலைமைக்கு ஆளாவதை எண்ணி விக்னேஸ்வரி கலங்கினார்.




சன்லவ் முதியோர் இல்லத்திற்கு வெளியே விக்னேஸ்வரி ரெத்தினம், 43. **படம்: டினேஷ் குமார்**

“விழிப்புணர்வும் கல்வி அறிவும் அதிகரித்திருந்தாலும் பிள்ளைகள் பெற்றோரைப் பண்டிகைக் காலத்தில் கவனிப்பதில்லை என்பதை அன்றுதான் அறிந்தேன்,” என்று அவர் கூறினார்.

திருவாட்டி விக்னேஸ்வரியும் அவரின் நண்பர்களும் கிட்டத்தட்ட 500 பேருக்கு உணவு பரிமாறுவர். சோறு, கோழிக்குழம்பு உள்ளிட்ட உணவு வகைகளைப் பண்டிகைக் காலத்தில் ருசிக்கும் முதியோர், நன்றி கலந்த மகிழ்ச்சியுடன் இருப்பதைக் கண்குளிரக் காண்கிறார் விக்னேஸ்வரி. மதிய உணவுடன் கலை நிகழ்ச்சி அங்கமும் இடம்பெறுவது வழக்கம்.

இதுபோன்ற உதவிகளைத் தனிமனிதராகச் செய்யும் அளவுக்குத் தாம் பணபலம் படைத்தவர் அல்ல என்பதால் படைபலத்தை நம்பியிருக்கிறார் திருவாட்டி விக்னேஸ்வரி. தேசிய தினம், கிறிஸ்மஸ் தினம் ஆகிய கொண்டாட்டங்களையும் நடத்தி வரும் திருவாட்டி விக்னேஸ்வரி, இதுபோல பலரும் செய்யவேண்டும் என விரும்புகிறார்.

janark@sph.com.sg



அறையில் தன்னுடன் வசிக்கும் முதியவருடன் திரு வீரப்பன் (வலக்கோடி). **படம்: தினேஷ் குமார்**

**அனுஷா செல்வமணி**

முன்பு மனைவியுடனும் இரு மகன்களுடனும் ஒன்றுகூடி, புத்தாடை அணிந்து, தீபாவளியைப் புன்னகையோடு கொண்டாடிய தருணங்களை நினைவுகூர்ந்து கலங்கினார் வைத்தியலிங்கம் வீரப்பன், 84.

இன்று மூத்தோர் சமூக இல்லவாசியாக அதே பண்டிகையை அவர் வரவேற்கிறார்.

மூத்த மகன் திருநாவுக்கரசு மீது அளவுகடந்த அன்பைப் பொழிந்த வீரப்பன், அந்த மகன் மாரடைப்பால் இறந்த மறுஆண்டே மனைவியையும் அதே நோய்க்குப் பறிகொடுத்தார். அதைத் தொடர்ந்து இளைய மகன் தம் குடும்பத்தோடு ஆஸ்திரேலியாவுக்கு இடம்பெயர முடிவெடுத்தது வீரப்பனுக்கு மேலுமோர் அடி.

அந்த மனப்போராட்டத்திலிருந்து மீண்டுவர அவருக்குத் தோள் தந்தது ‘ஏவா மூத்தோர் சமூக இல்லம்’. மகனுக்கு பாரமாக இருக்க வேண்டாம் என்று முடிவெடுத்து ஆஸ்திரேலியா செல்லாமல் மூத்தோர் சமூக இல்லத்துக்குள் காலடி எடுத்து வைத்தார் வீரப்பன்.

இருப்பினும், முதியோர் இல்லத்தில் அவருக்கு மற்றொரு குடும்பம் கிடைத்துள்ளது.

மங்கலத் திருநாளான இன்று, அவர் இல்லத்தில் குடியிருக்கும் மற்ற முதியவர்களுடன் பலவித நடவடிக்கைகளில் ஈடுபட்டு, சுவையான உணவருந்தி தன்னுடன் அறையில் தங்கியிருக்கும் மற்றோர் இந்திய முதியவருடன் மனம் விட்டு உரையாடி பொழுதைக் கழிக்கிறார்.

மாதம் இருமுறை இளைய மகன் சிவஞானம் தொலைபேசிவழி வீரப்பனைத் தொடர்புகொண்டு பேசுவது அவர் மனதைக் குளிரச் செய்கிறது.

கடந்த ஈராண்டுகளாக இல்லத்தில் தங்கியுள்ள வீரப்பனை அதிகம் கவனித்துக்கொள்வது அங்கு பணியாற்றும் மூத்த சமூக சேவையாளர் திருவாட்டி விஜயா பொன்னுசாமி, 68.

“முதலில் வீரப்பன் இங்கு வந்தபோது எனக்கு மிகவும் கவலையாக இருந்தது. மனைவியையும் மூத்த மகனையும் இழந்த அவர், மகனுக்குச் சுமையாக இருக்கக் கூடாது என்று தன்னலம் கருதாதவர். அந்த முதியவரைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பை நான் மேற்கொள்ளத் தொடங்கினேன்,” என்று கடப்பாட்டு உணர்வுடன் கூறினார் விஜயா.

தீபாவளிக்குப் புத்தாடை அணிய முடியாமல் போனாலும் திரு வீரப்பன், “இந்த இல்லம் எனக்கு சொர்க்கம் போல. எவ்வித சிரமமும் எனக்கு இங்கில்லை. மனைவியையும் மகனையும் எண்ணி ஏங்கினாலும் இந்த இடம் இதமளிக்கிறது,” என்று ஒரு புன்முறுவலுடன் கூறினார்.

sanush@sph.com.sg

## நான்கு சுவர்களுக்குள் அமைதியான ஒரு தீபாவளி



சிறைவாசம் முடிந்து மீண்டும் குடும்பத்தாரைக் காண விரும்புகிறார் ரவி. **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

**அனுஷா செல்வமணி**

ஒரு காலத்தில் ரவி (உண்மை பெயரல்ல) தீபாவளிப் பண்டிகையைத் தம் குடும்பத்துடன் தடபுடலாகக் கொண்டாடினார்.

ஆனால், 62 வயதாகும் இவருக்கு, இப்போது தன் சிறையின் நான்கு சுவர்கள்தான் துணை.

தீபாவளியை மனைவி, இரு மகன்களுடன் வரவேற்றவர், கடந்த ஐந்தாண்டுகளாக சிறையில் மற்ற கைதிகளுடன் உணவருந்தி தொலைக்காட்சி பார்த்துக் கழித்து வருகிறார்.

ஒவ்வொரு முறையும் தீபாவளியன்று குடும்பத்தினருடன் கோவில்களுக்குச் சென்று உணவு விநியோகத்தில் ஈடுபட்டு வந்த ரவி, தீபாவளிக்குத் தன் மகன் அனுப்பிய வாழ்த்தட்டையைப் பார்த்துக் கண்கலங்குகிறார்.

சுய தொழில் நடத்தி வந்தபோது, பொய்த் தகவல்கள் கொண்ட ஆவணங்களைத் தயார் செய்ததற்காக அவரது வாழ்க்கை தடம்புரண்டது.

ரவி இன்னும் ஒன்றரை ஆண்டுகள் சிறையில் தண்டனை அனுபவிக்க வேண்டும்.

இந்தியாவிலிருந்து வேலை வாய்ப்புகளுக்காக 30 ஆண்டுகளுக்கு முன்பு சிங்கப்பூர் வந்த இவர், கல்வியில் சிறப்புத் தேர்ச்சி கண்டு தம் பணிக்காக பல தென்கிழக்காசிய நாடுகளில் வசித்த அனுபவமுடையவர்.

தந்தையின் அன்பும் அரவணைப்பும் அவரின் மகன்கள் இருவருக்கும் கிடைக்காமல் இருந்தாலும், இருவரும் தந்தையைப் பெருமைப்படுத்தும் வகையில் கல்வியில் சாதித்து முழுநேரப் பணியிலும் தற்போது உள்ளனர்.

சிறைக்குச் சென்ற முதல் இரண்டு ஆண்டுகள், தன் குடும்பத்தை நினைத்து ரவி கண்ணீர் வடிக்காத நாளே இல்லை.

புதிய சூழலுக்கேற்ப மாறிக்கொள்வது, ஒரே அறையில் மேலும் மூன்று கைதிகளுடன் வாழ வேண்டிய நிலையை ஏற்றுக்கொள்வது என அவர் சிரமப்பட்டார்.

மாதத்தில் ஒரு முறை மட்டுமே ரவி தன் குடும்பத்தாரை நேரடியாக 20 நிமிடங்களுக்குச் சந்திக்க முடியும்.

இல்லாவிடில் அவர் மெய்நிகர் அல்லது மின்கடிதங்கள் வழியாகத்தான் அவர்களுடன் தொடர்பில் இருக்க முடியும்.

தன் விடுதலைக்குப் பிறகு குடும்பத்தினரைக் கட்டித்தழுவும் தருணம் வர, எஞ்சியுள்ள நாள்களை எண்ணிக்கொண்டிருக்கிறார் இவர்.

ஒரு நாளில் ஒரு மணி நேரம் மட்டும்தான் கைதிகள் அவர்களின் சிறை அறையிலிருந்து வெளியே வர முடியும்.

கைதிகளின் மனநலன் காக்க ஒவ்வொரு வாரமும் சமயம் சார்ந்த மன ஆலோசனை அமர்வும் உள்ளது.

சிறை வாழ்க்கை தனக்கு மனிதநேயத்தையும் தன்னடக்கத்தையும் கற்றுத்தந்துள்ளதாக சொன்னார் ரவி.

சிறைக் கைதிகள் விடுதலைக்குப் பிறகு தவறான கோணத்தில் பார்க்கப்படுவதை உடைத்தெறிய விரும்பும் ரவி, ஒரு முழுநேரப் பணியில் சேர்ந்த பின்னர் சமூக சேவையிலும் ஈடுபட விருப்பம் தெரிவித்தார்.

sanush@sph.com.sg

## சிறப்புத் தேவையுடையோருடன் தித்திக்கும் தீபாவளி

**ரவி சிங்காரம்**

தீபாவளிக் கொண்டாட்டத்தில் சிறப்புத் தேவை உடையோரும் ஈடுபடவேண்டும் என்ற உன்னத நோக்குடன் தொண்டூழியரணி ஒன்று திரண்டுவந்தது.

தொண்டூழியர்கள் ‘எஸ்பிடி’ (Serving People with Disabilities) கீழ் இயங்கிவரும் பகல்நேரப் பராமரிப்பு நிலையத்தில் உள்ள சிறப்புத் தேவையுடையோரைச் சந்திக்க நவம்பர் 7ஆம் தேதி சென்றிருந்தனர். ‘பிலீவ் டு சக்சஸ்’ (Believe To Success) சமூக அமைப்பின் எட்டு தொண்டூழியர்கள் இத்திட்டத்தில் இணைந்திருந்தனர்.

இந்தச் சமூக அமைப்பு மாதந்தோறும் சிறப்புத் தேவையுடையோர் தங்கள் வாழ்க்கைக் கதைகளை இணையவழி பகிர்ந்துகொள்ள வாய்ப்பளிக்கிறது. பண்டிகைக் காலங்களில் நேரடியாகவும் சென்று உதவுகிறது.

இம்முறை நடந்த தீபாவளி நிகழ்ச்சியில் ஆடல் பாடல் அங்கங்களும் சுவாரசியமான விளையாட்டுகளும் இடம்பெற்றன. வெற்றி பெற்றோருக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

பங்குபெற்ற 40 சிறப்புத் தேவையுடையோருக்கும் மேலும் சில ‘எஸ்பிடி’ பயனாளிகளுக்கும் பணியாளர்களுக்கும் மொத்தம் 70 பலகாரப் பைகளைத் தொண்டூழியர்கள் வழங்கினர்.



தொண்டூழியர்களில் ஒருவரான ஆட்டிசம் உள்ள இசைக் கலைஞர் முகம்மது அர்ஷட் ஃபவாஸ், பன்மொழிப் பாடல்கள் பாடி உற்சாகப்படுத்தினார். **படம்: ரவி சிங்காரம்**

‘பிருந்தாஸ்’ உணவகம் ஆளுக்கு $20 பற்றுச்சீட்டையும் வழங்கி ஆதரித்தது.

சிறப்புத் தேவையுடையோருக்கு உணவூட்டி, வலுவான பந்தத்தை ஏற்படுத்தும் வாய்ப்பையும் தொண்டூழியர்களுக்கு ‘எஸ்பிடி’ வழங்கியது.

நிகழ்ச்சி முடிவடைந்ததும் ‘எஸ்பிடி’ சுற்றுலா நடைபெற்றது.

‘எஸ்பிடி’யின் தொழிற்சாலைக்குச் சென்ற தொண்டூழியர்கள், சிறப்புத் தேவையுடையோருக்கு ‘எஸ்பிடி’ வழங்கும் தொழில்ரீதியான பயிற்சிகளை அறிந்தனர்.

சிறப்புத் தேவையுடையோரைப் பராமரிப்போர், தங்களுக்கென நேரம் செலவிடவும் முழுநேர வேலையில் பணியாற்றவும் ‘எஸ்பிடி’ முக்கியப் பங்காற்றுகிறது.

வாரநாள்களில் தொடர்ச்சியாக வந்து உதவும் தொண்டூழியர்கள், சிறப்புத் தேவையுடையோருக்கு மகிழ்ச்சியை வித்திடும் ஆதரவாளர்கள் ஆகியோர் தேவை என்று கூறியது ‘எஸ்பிடி’.

தன் தொழிற்சாலையில் பணியாற்றுவோருக்கு வேலை வாய்ப்புகளை வழங்கும் அமைப்புகளையும் தேடுகிறது ‘எஸ்பிடி’. அவர்களில் பலரும் தையல், கைவினைப் பொருள்களைச் செய்வதில் வல்லவர்கள்.

மேல்விவரங்களுக்கு: http://spd.org.sg/ மற்றும் believetosuccess.com இணையத்தளங்களை நாடலாம்.

நிகழ்ச்சியின் இணை ஏற்பாட்டாளர் ஹாஜா ஜஃபருல்லாஹ், வாழ்வின் எதார்த்தத்தை இந்நிகழ்ச்சி மூலம் உணர்ந்ததாகத் தெரிவித்தார்.

rsingaram@sph.com.sg

## பார்வையிழந்தும் உள்ளத்தில் ஒளிவெள்ளம்

**ரவி சிங்காரம்**

தீபத்தின் ஒளியைக் கண்ணாரப் பார்க்க முடியாவிட்டாலும் அதை உள்ளுணர்ந்தவராக வாழ்ந்து வருகிறார் 72 வயது திரு மோகன் நாராயணசாமி (படம்).



கடந்த 10 ஆண்டுகளாக ‘ரெட்டினைடிஸ் பிக்மண்டோசா’ (Retinitis Pigmentosa) எனும் கண் நோயினால் படிப்படியாகப் தம் பார்வையை இழந்துவரும் இவருக்கு, இப்போது உலகம் வெறும் நிழல்கள்தான். முகங்கள் தெரிவதில்லை.

எனினும், தீபாவளிக்காக தம் நண்பர்கள், அண்டைவீட்டார், ‘எஸ்ஏவிஹெச்’ எனும் சிங்கப்பூர் கண் குறைபாடுள்ளோர் சங்கத்தினர் ஆகியோரை மகிழ்விக்கப் பலகாரங்கள் தந்துள்ளார்.

இவர் கடந்த 10 ஆண்டுகளில் என்றாவது ஒரு நாள்தான் தேக்காவிற்குச் சென்றுள்ளார். பரபரப்பான தேக்கா தெருக்களில் தனியாகச் செல்லமுடியாத நிலையில், தம்மை அங்கு அழைத்துச் செல்லப் பிறரிடம் கேட்கவும் திரு மோகன் தயங்குகிறார்.

திரு மோகனின் மனைவி எட்டு ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். தாயாரும் ஈராண்டுகளுக்கு முன்பு தவறிவிட்டார்.

“அக்காலத்தில் மற்ற குடும்பங்களைப்போல் தீபாவளியை ஆரவாரத்தோடு கொண்டாடி வந்தோம். பார்வை குறையக் குறைய, நான் தீபாவளி கொண்டாடும் முறையும் மாறிப் போனது,” என ஏக்கத்துடன் கூறுகிறார் மோகன்.

தீபாவளிக்காக ‘8 பாயிண்ட் எண்டர்டெய்ன்மண்ட்’ வழங்கிய டாக்டர் வைக்கம் விஜயலட்சுமி கச்சேரிக்குச் சிறப்பு நுழைவுச் சீட்டுகள் பெற்ற பயனாளிகளில் இவரும் ஒருவர்.

“இதற்கு முன்பு கச்சேரிகளுக்குச் செல்ல ஆசைப்பட்டதுண்டு. இந்த இசைவிருந்தைப் பெரிதும் ரசித்தேன்,” என்றார்.

தீபாவளிக்காக இஸ்தானாவுக்குச் செல்லத் திட்டமிட்டுள்ளதாகக் கூறிய திரு மோகன், நண்பரின் நேரத்தைப் பொறுத்து அந்த ஆசை நிறைவேறும் என்றார்.